# உழைப்பின் அவசியம்

உழைப்பே உயர்வு தரும். உழைப்பு என்றால் என்ன? தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் சீரும் சிறப்புடன் செய்யப் பாடுபடுவதே உழைப்பாகும். எந்த ஒரு மனிதனும் தன் வாழ்க்கை ஒரு நல்ல பாதையில் செல்ல வேண்டும் என்று விரும்பினால் அவன் கடுமையாக உழைக்க வேண்டும். எந்த ஒரு வேலையில் வெற்றி அடையவும் உழைப்பைத் தவிர வேறு வழியே இல்லை.

முதலாவதாக, நான் மாணவர்களைப் பற்றிச் சொல்லப் போகிறேன். 'முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்பது சான்றோர் வாக்காகும். இது மாணவர்களுக்கு மிக நன்றாகவே பொருந்தும். ஒரு முறை தேர்வில் சிறப்பாகச் செய்வது என்பது மட்டும் போதாது. தேர்வில் எப்போதும் முதல் மாணவனாக இருக்க வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். அதுவே அவனைக் கடுமையாக உழைக்கத் தூண்டும். ஆகையால், ஒருவன் கடுமையாக உழைக்க வேண்டுமானால் அவனுக்கு ஒரு குறிக்கோள் இருக்க வேண்டும். மாணவர்கள் தங்களது இளம் பருவத்திலேயே ஒரு குறிக்கோளை வைத்துக்கொள்வது நல்லது.

அடுத்ததாக, நான் பெற்றோரின் உழைப்பைப் பற்றிக் கூறப் போகிறேன். பெற்றோர்கள் தங்கள் பிள்ளையைப் பெற்றெடுத்ததோடு தங்களது கடமை முடிந்துவிட்டது என்று நினைத்துக்கொள்ளாமல் தங்கள் பிள்ளை வாழ்க்கையில் சிறந்து விளங்க, சிறு பிள்ளையாக இருக்கும்போதே நல்ல பழக்க வழக்கங்களைக் கற்பிக்க வேண்டும். பிறகு, பள்ளிப் பருவத்தில் இருக்கும் பிள்ளை சிறந்த கல்வியைப் பெறத் தேவையானவற்றைச் செய்துகொடுக்க உழைக்க வேண்டும். படிப்பு முடிந்தவுடன் தம் பிள்ளை எப்போதுமே மகிழ்ச்சியாக இருக்க நல்ல முறையாகத் திருமணம் செய்து வைக்க உழைக்க வேண்டும். இவையே பெற்றோரின் கடமைகளாகும்.

அடுத்து, நான் வேலை செய்வோரின் உழைப்பைப் பற்றி விளக்கப் போகிறேன். எந்த வேலையைச் செய்தாலும், அதை நாணயமாகவும் சிறப்பாகவும் செய்ய வேண்டும். தான் வேலை செய்யும் நிறுவனத்திற்கும் பணிக்கும் பெருமை சேர்க்கும்வகையில் உழைக்க வேண்டும். அதுமட்டுமின்றித் தன் குடும்பத்தை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளும் முறையிலும் உழைக்க வேண்டும். இவையெல்லாம் ஒரு நல்ல தொழிலாளியின் உழைப்பைக் குறிக்கின்றன.

இறுதியாக, நான் நாட்டு மக்களின் உழைப்பைப் பற்றிச் சொல்லப் போகிறேன். நாட்டு மக்களில் மாணவர்கள், குடும்பத் தலைவர்கள், வேலை செய்வோர் மற்றும் நாட்டுத் தலைவர்களும் அடங்கியுள்ளனர். நாட்டுத் தலைவர்கள் தங்கள் மக்களை ஒன்றுபடுத்தவும் நாட்டின் நலனுக்காக நல்ல திட்டங்களைத் தீட்டவும் உழைக்க வேண்டும். குடும்பத் தலைவர்கள் குடும்பத்தில் பாசப்பிணைப்பையும் ஒழுக்கத்தையும் உருவாக்க வேண்டும். இவையெல்லாம் இருந்தால்தான் ஒரு நல்ல குடும்பத்தையும் அதன்வழி சிறந்த நாட்டையும் உருவாக்க முடியும். அதற்கு ஓர் உதாரணம் சிங்கப்பூர். ஒரு சிறு மீன்பிடிக்

கிராமமாக இருந்த சிங்கப்பூர் நம் நாட்டு மக்களின் உழைப்பினால்தான் இந்த அளவுக்கு மேன்மை அடைந்திருக்கிறது. ‘‘சிங்க நடைபோட்டுச் சிகரத்தில் ஏறு, சிகரத்தை அடைந்தால் வானத்தில் ஏறு’’ என்ற ஒரு புகழ்பெற்ற பாடல் வரிகளைப் போல், எவ்வளவுதான் வாழ்க்கையில் உயர்ந்தாலும் உழைப்பதை நாம் நிறுத்தக்கூடாது.

நாம் எப்போதும் உழைக்க வேண்டும். அதற்குக் காரணம் வெற்றிப் பாதையில் நடைபோட உழைப்பைத் தவிர வேறு வழியே இல்லை. உழைப்பு இல்லை என்றால் வாழ்க்கையில் நல்ல உயர்வும் இல்லை. உழைப்பே உயர்வு தரும் என்பதை இதிலிருந்தே நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

**கிர்த்திக்கா,**
**உயர்நிலை 2 உயர்தமிழ்**